1978 மார்ச் 13]

(ஆ) ஆமெனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதம், அரசாங்க ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியத்தை தழுவியுள்ளது. ஆகவே, தற்போது தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு தனியாக ஊதியத்தை மாற்றி அமைக்கத் தேவை இல்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் புதிய அணைக்கட்டுகள்.

*547. வினா—திரு கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஓடும் ஆற்றுத் தண்ணீரை வீணாக்காமல் சிறு அணைக்கட்டுகள் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஆறுகளின் குறுக்கே கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம். மலைக் குன்றுகளின் வட்டார முன்னேற்றத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ஓடும் ஆறுகளின் குறுக்கே 13 சிறு அணைகள் கட்டும் திட்டம் 1975–76ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த அணைக்கட்டுகள் அனைத்தும் நீலகிரி பகுதியில் ஓடுகிற காட்டாறுகளின் குறுக்கே கட்டப்படுகின்றன. இக் காட்டாறுகள் பல பகுதிகளிலிருந்து ஓடிவந்து முடிவில் மோயார் ஆறு அல்லது பவானி ஆற்றில் கலக்கின்றன. மலைப்பகுதியில் உள்ள சிறிய பள்ளத்தாக்குகளிலிருந்து பெருகி வருகின்ற பெரும்பாலான இந்த காட்டாறுகளுக்கு குறிப்பிட்ட பெயர் எதுவும் இல்லை.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சிறிய சிறிய காட்டாறுகள் ஓடுகின்ற இடங்களில் அந்தந்த கிராமங்களுக்கு பயன்படும் வகையில் அந்த ஆற்றிலிருந்து நீரை ஏற்றி அங்குள்ள மக்களுக்கு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 13 செக்டாம்-களுக்கான திட்டங்கள் இருப்பதாக ஏற்கெனவே என் பதிலில் சொன்னேன். அவைகள் எல்லாம் அந்தந்த

கிராமங்களிலுள்ள மக்களுக்காக பலன் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான், அந்தந்த கிராமங்களில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை உச்சி கவுடர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல 9-50)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் இத்தகைய 13 திட்டங் களை கட்டயிருப்பதாகத் குறிப்பிட்டார்கள். அதிலே மாண்பு மிகு உறுப்பினர் உச்சி கவுடர் சேர்ந்த தொகுதியாகிய கூடலூர் தொகுதியில் எந்தெந்த இடங்களில் கட்டியிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நண்பர் கிட்டப்பா அவர்கள் ஜாதி கூடாது என்று சொல்பவர் ஆயிற்றே ? எனவே, உச்சி கவுடர் என்று ஜாதி அடிப்படையில் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மத சம்பந்தப்பட்ட கேள்வியை இப்போது இங்கே கேட்க வேண்டாம். மூலக் கேள்வியை யொட்டி ஏதாவது ஒழுங்குப்பிரச்னை இருந்தால் எழுப்புங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியில், கூடலூர் கிராமம் மாங்குளி அருகில் க.க. எண் 313/1-ல் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 20,000 ரூபாய் செலவிலும், நெல்லியாளம் கிராமம் க.ச. எண் 444-ல் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 60,000 ரூபாய் செலவிலும், பாடந் துறை கிராமம் க.ச. எண் 13-ல் ஒரு தடுப்பு அணைக்கட்டுதல் 22,000 ரூபாய் செலவிலும், பாடந்துறை கிராமம் க.ச. எண் 71-ல் மற்றும் 72-ல் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 42,000 ரூபாய் செல விலும், எருமாடு கிராமம் மூப்பகன்னூர் அருகில் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 50,000 ரூபாய் செலவிலும் ஆகும்.

திரு. ரா. கு. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களின் மூலமாக கோவை மாவட்டத்தில் ஏதாவது பகுதி கள் பயன் பெறுகின்றனவா ? அப்படிப் பெறுமானால், அதிலே காங்கேயம் பகுதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தது கோவை மாவட்டத்தைப் பொறுத்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தது, அதனால், தாமரைக்கனி, தயவுசெய்து அது சம்பந்தமான கேள்வியைப் போடவும்.

1978 மார்ச் 13]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின் போது பால் வாங்கும் விலையை அதிகரித்திருப்பதாகக் கூறினார்கள். அதைப்போலவே பாலை விற்கின்றவர்களிடமும் அதிக விலை கொடுத்து வாங்குவதற்கான உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை.

திரு. வி. கொ. சின்னசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பவானி ஆற்றில் கலக்கின்ற ஆற்றின் குறுக்கே அணைகட்டுவதாக உச்சி கவுடர் கேள்விக்குப் பதில் அளித்தார்கள். பவானி ஆற்றிற்கு வருகிற பவானிசாகர் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுவதால், பவானிசாகர் அணைக்கு வருகிற தண்ணீர் இதனால் பாதிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆறுகளிலே இருந்து வரக்கூடிய தண்ணீர் மோயாறு அல்லது பவானிசாகர் ஆறுகளில் கலந்து கொண்டிருந்தன. இந்த ஆறுகளிலெல்லாம் இப்பொழுது செக் டாம்ஸ் போடுதவன்மூலமாக இந்த சிறு அணை கட்டுவதன் மூலமாக இந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள பல பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவது என்ற முறையிலே இந்தத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. பவானியைப் பொறுத்த வரையில், கலந்து கொண்டிருந்த ஆறுகளில் அணைகட்டுவதால் எங்கே பவானி ஆற்றுக்குத் தண்ணீர் வராமல் போய்விடுமோ என்கிற அச்சம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் முதுமலை பாரஸ்டு ஏரியாவில், அந்தப் பகுதியில் நீர்வீழ்ச்சி போகிறது. நாங்கள் கமிட்டிக்குப் போகும் போது பார்த்திருக்கிறோம். அந்தப் பகுதியில் அணை கட்டினால், அந்த இடங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். இந்த நீர்ப்பாசன வசதி ஏற்படவில்லை என்றாலும், அதிலே மின்விசை உற்பத்தியை யாவது செய்யலாம். ஆகவே, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சிறு பாசனத் திட்டத்தைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரிய அணையைப் பற்றிக் கேட்கிறார். ஆகவே, இது பொதுப்பணித் துறை வேலை. அவர்களைக் கேட்டால் உண்மையிலேயே நல்ல பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒழுங்குப் பிரச்சினை

ஓர் உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவுபெரு அலுவலர் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுவது பற்றி

திரு. மு. அம்பிகாபதி : ஓர் ஒழுங்குப் பிரச்சினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 ஆம் தேதி காலையில் 11 மணிக்கு என்னைப் பார்ப்பதற்காக என்.ஜி. ஓ. யூனியனைச் சேர்ந்த ரவிசெல்வம் , ஜெகந்நாதன் ஆகியோர் வந்திருக்கிறார்கள். அவர்களைக் கோட்டைக் காவலர்கள் கைது செய்து வெளியே நிறுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மீது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. அம்பிகாபதி அவர்கள் எந்த அடிப்படையில் இதைப் பற்றி சொல்லுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். விதியின் அடிப்படையில் எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். இதை ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்ப வேண்டாம். எழுதி அனுப்புங்கள்.

திரு மு. அம்பிகாபதி : இது என்னுடைய உரிமைப் பிரச்சினை. என்னைப் பார்க்க வந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். உட்காருங்கள்.

(3) அமைச்சரின் அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. பாலகிருஷ்ணன், செ. சிவசாமி, கிருஷ்ணன், எம். அண்ணாமலை, என். பழனிவேல் ஆகிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேரவையின் விதி 42-ன் கீழ் எழுப்பியுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து விவாதிக்க அவையை ஒத்தி வைக்கக்கோரிய அந்தத் தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டு மறு